**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 09.01.2019—ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **07.01.2019** இராசிபுரம் நகராட்சி

**<u>பொருள்கள்</u>**

(1) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் 6200 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு (Internal Plumping for Water Supply HSC) வழங்க 19.12.2018—இல் மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் வெளியிடப்பட்டன. அதற்கான விளம்பரக் கட்டணங்கள் வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | தி நியு இந்தியன் எக்ஸ்பிரஸ் | — தமிழ்நாடு | `. | **48750/—** |
| 2) | மாலை முரசு | — தமிழ்நாடு | `. | **20000/—** |
| | | | | —————— |
| | | | | 68750/- |
| | மாநில & மத்திய சரக்கு மற்றும் சேவை வரி | | | **3438/—** |
| | | | | —————— |
| | | | | **72188/—** |
| | | | | —————— |

விளம்பரக் கட்டணம் `. 72188/— ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/218/18)

**தீர்மானம் எண். 482**

அனுமதிக்கப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சி குடிநீர் லாரி எண். ட்டி என் 28 B இசட் 9021 மின்கலம் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் புதிய மின்கலம் வாங்க உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விவரங்கள் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) ஆர்.கே. சிஸ்டம்ஸ், 133எ, அண்ணாசாலை, இராசிபுரம் | — | `. | **13808/—** |
| 2) பவர் ஆன் சொலுசன்ஸ், பாலசுப்ரமணியா காம்ப்ளக்ஸ், (புதிய பேருந்து நிலையம் எதிரில்) | — | | **14200/—** |
| 3) ஸ்ரீ ராம் ஏஜென்சீஸ், 39, எஸ்பி பூதுார், பரமத்தி சாலை, நாமக்கல் | — | | **14600/—** |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள ஆர்.கே. சிஸ்டம்ஸ், இராசிபுரம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** அ) குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஆர்.கே. சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் மூலம் மின்கலம் வாங்க அனுமதிக்கலாம்.

ஆ) செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(இ2/19/19)

**தீர்மானம் எண். 483**

அனுமதிக்கப்பட்டது

(3) இராசிபுரம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–19–இன்கீழ் செம்மலைத் தெருவில் அங்கன்வாடி மையம் அமைக்கும் `. 8.50 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு 04.01.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், 6எ, தட்டான்குட்டை ரோடு – மதிப்பீட்டைவிட 0.03 % குறைவு

2) திரு ஜே. ரவிசந்திரன், ஒப்பந்ததாரர், ஆர். கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 0.82 % அதிகம்

மதிப்பீட்டைவிட 0.03 % குறைவான திரு ஆர். மாணிக்கம் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.03 % குறைவான திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ1/3338/18)

**தீர்மானம் எண். 484**

அனுமதிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–19–இன்கீழ் காந்தி சாலை வேலா பூங்காவில் அங்கன்வாடி மையம் அமைக்கும் `. 8.50 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு 04.01.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், 6எ, தட்டான்குட்டை ரோடு – மதிப்பீட்டைவிட 0.03 % குறைவு

2) திரு ஜே. ரவிசந்திரன், ஒப்பந்ததாரர், ஆர். கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 0.76 % அதிகம்

மதிப்பீட்டைவிட 0.03 % குறைவான திரு ஆர். மாணிக்கம் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.03 % குறைவான திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ1/3338/18)

**தீர்மானம் எண். 485**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– பெ. நடேசன்,
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.